மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4—அரசினர் சட்டமுன் வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்ற தலைப்பின் கீழுள்ள உள் இனம் (13) 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1987) மற்றும் உள் இனம் (15) 1987 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) (வேலை நிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின்போது, வேண்டுமென்றே போக்கு வரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக, ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்துசெய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1987) ஆகியவற்றை உள் இனம் (3) 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1987)க்கு முன் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(எ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"1987—ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இன்று அமைச்சர் அவர்கள் வரி வசூலிப்பது சம்பந்தமாக ஒரு புதிய முறையை அமுலுக்கு கொண்டு வர சட்டத் திருத்தம் கொண்டு வந்துள்ளார், அதாவது, ஒரு பேருந்திற்கு அல்லது ஒரு மோட்டார் வாகனத்திற்கு உரிமம் புதுப்பிப்பதற்காகக்

1987 மே 8] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

கொண்டு செல்கிற நேரத்தில், ஏற்கனவே ஏதேனும் வரி மீதி இருந்தால், அல்லது மற்ற ஏதேனும் முறையில் பெனால்ட்டி என்ற முறையில், ஏதாவது பாக்கியிருந்தால், அது கட்டப்பட்டால்தான் இது புதுப்பிக்கப்படும் என்ற முறை இந்தச் சட்டத் திருத்தம் மூலம் கொண்டு வரப்படுகிறது.

நமது நாட்டிலே பெரிய வசதி உள்ளவர்கள் அல்லாமல், வாழ்க்கையை ஓரளவிற்கு நடத்துவதற்கு வசதியுள்ளவர்கள் சி.சி போட்டோ அல்லது மற்ற முறையிலோ, ரூ. 5,000 அல்லது ரூ. 10,000 முதலீட்டிலே அதிகமான வட்டிக்கு டாக்சி வாங்குபவர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதன் வழியாக, அவர்கள் ஏதேனும் அரியர்ஸ் பணம் கட்ட வேண்டியிருந்தால் அது முழுவதுமாகக் கட்டப் படுமானால் அது புதுப்பிக்கப்படும் என்ற முறையைக் கொண்டு வருகிறது. சாதாரண மக்களுக்குச் சிரமத்தை கொடுப்பது இது. நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வது எல்லாம் அந்தப் பணத்தைத் தவணையாகச் செலுத்த வசதி ஏற்படுத்தவேண்டும். இன்றைக்கு வரி நிறைய பாக்கி வைத்திருப்பவர்கள் இருக்கலாம். அதை வசூலிப்பதற்கு மற்றுமுள்ள நடவடிக்கைகளை எடுப்பதற்கு இன்றைக்குச் சட்டத்திலே இடம் இருக்கிறது. இந்தச் சட்டத்தைச் சரிவர இம்பிளிமென்ட் செய்ய வேண்டிய மோட்டார் வாகன சட்டத்தை அமுல்படுத்தக்கூடிய ஆர். டி. ஒக்கள் போன்று, இலாகாவைச் சேர்ந்தவர்கள், காலா காலத்திலே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை, காலாகாலத்திலே செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யாததன் காரணமாக, இன்று இப்படிப்பட்ட பாக்கி ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்காது. அதைச் சரிக்கட்டுவதற்கு இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது என்பது சரியாக இருக்குமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று ஒரு வாகனத்தினுடைய எப்.சி.யை ரினியூ பண்ண கொடுக்கக் கூடிய காலத்தில், அவர்கள் முழுமையாகப் பணம் கட்டினால்தான் ரினியூ பண்ணமுடியும் என்ற முறையை, இரண்டு தவணை அல்லது 4 தவணைகளாகக் கட்டுவதற்கு அவர்களுக்கு அவகாசம் கொடுக்க வேண்டும். இன்றைக்கு மோட்டார் வாகனம் வைத்திருக்கக் கூடியவர்கள் அல்லது அதைத் தொழிலாக நடத்தக்கூடியவர்கள் பணக்காரர்கள் அல்ல; ஏழைகள் நடுத்தர மக்களும் அதிலே உண்டு என்ற உணர்வோடு அந்த விஷயத்தை அணுக வேண்டுமென்று மட்டும்தான் இந்த நேரத்திலே பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4-10)

ஆகவே தவணைகளாகக் கொடுக்க இந்தச் சட்டத்தில் இடம் கொடுக்க வேண்டுமென்றுகேட்டு, அந்த முறையிலேதிருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அமைச்சரவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவு சம்பந்தமான கருத்துக்களைத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய உணர்வுகளை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் தவணை முறையில் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை வராமல் இருக்க வேண்டும் என்றுதான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது. கடன் சுமையைச் சேர்த்து வைத்துக் கொண்டால், கடனைத் தவணையில் கட்ட வேண்டுமென்று கேட்க வேண்டிவரும். இப்போதிருக்கும் நிலைமையில் அனேகமாக தகுதிச் சான்றிதழ்கள் கேட்கும்போது முடிந்தவரை கட்ட வேண்டிய பாக்கிகளைக்கட்டிவிட வேண்டுமென்று வாய்மூலமாகச் சொல்லும்போது, அதற்கு வாகனச் சொந்தக் காரர்கள் எந்த மறுப்பும் தெரிவிப்பதில்லை என்றாலும், சட்டப்படி இது இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப் படுகிறது. வாகனங்கள் வைத்திருக்கிறவர்களுக்குக்கூட இது நன்மையாகத்தான் இருக்கும். அந்த நேரத்தில் நிர்பந்தப் படுத்தப்படுகிறார்கள் என்றாலும் எதிர்காலத்தில் கடன் சுமை இல்லாமல் தூண்டிவிட இது வாய்ப்பாக அமையும் என்று கருதுகிறேன். எனவே இந்தத் திருத்தம் அவசியமான ஒன்றாக இருக்கிறது.

இன்னொரு திருத்தத்தையும் கொண்டு வருகிறோம். அவர்களுக்குத் தண்டனைத் தொகை என்று வழங்கிவிட்டால் அதைத் திருப்பித்தர வேண்டுமென்று சொன்னால் அதை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வாய்ப்பு இந்தச் சட்டத்திலே இல்லாமல் இருக்கிறது. அதற்காக திருத்தம் கொண்டு வருகிறோம். இருக்கின்ற சட்டத்தை இன்னும் சிறப்பாக அமைத்து, அரசுக்கும் வாகனச் சொந்தக்காரர்களுக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்று இது கொண்டுவரப்படுகிறதே தவிர, வேறு எந்த நோக்கத்திற்காகவும் அல்ல என்று குறிப்பிட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத்திருத்தத்தை ஆதரித்து, நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைமுன்ள கேள்வி:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த)சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) [வேலைநிறுத்தம் அல்லது ஆர்பாட்டம் அல்லது கண்டனத்தின் போது வேண்டுமென்றே போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்து) செய்தல்] சட்டமுன்வடிவு 1987.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1987 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) [வேலை நிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின்போது வேண்டுமென்றே போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்து) செய்தல்] சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1987)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

Thiru J. HEMACHNDRAN; Mr. Deputy Speaker, Sir, I move the following amemdment starding in my ame;

"That the Tamil Nadu Motor Vehicles (Cancellation of driving licences for wilful obstruction of traffic during strike or demonstrasion or protest) Bill, 1987 (L. A. Bill No 22 of 1987) be referred to the Select Committee of the House consisting of ......Members List of Members will be given later)''.

திரு. கோ. வீரய்யன் : நான் வழிமொழிகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக ஆபத்தான ஒரு சட்டத்தை முன்மொழிந்திருக்கின்றார்கள் என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால் இந்த சட்டப்படி ஒரு ஓட்டுநருடைய லைசென்சை பிடுங்குவதற்கு மட்டுமல்ல அவர்களுடைய வேலையை பிடுங்குவதற்குமுள்ள சரத்துக்கள் இதிலே சேர்க்கப்பட்டுள்ளன என்று சொல்லிக்கொள்கிறேன். இப்படிப்பட்ட சட்டம் இன்றைக்குத் தேவையா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

---

*1987ஆம் வருடம் மே மாதம் 7 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.